1974 மார்ச் 28]

வளம் நன்ருக இருக்கிறது என்று கூறக்கூடும். அந்த அளவுக்கு அங்கே தண்ணீர் கிடைக்கும் என்று நமது வேளாண்மை விஞ்ஞானிகள் பரிசோதித்துச் சொல்வார்களேயானுல் அங்கு விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

சங்கையில் கால்நடை வளர்ப்புத் துணை நிலையம்.

* 657 வினு—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சங்கையில், கால்நடை வளர்ப்புத் துணை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இல்லை.

Polutry Extension Centre, kappalur.

* 658 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the expansion of Poultry Extension Centre near the chick hatchery at Kappalur in Madurai district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், நாம் இந்த பவுல்ட்ரி டெவலப்மென்ட்டுக்கு அதிகமாக பணம் ஒதுக்கியும், நமக்குத் தேவைப்படும் முட்டைகளில் 40 சதவிகிதம் கேரளத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இதை மாற்றி நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு முட்டை ஏற்றுமதி செய்யத்தக்க அளவுக்கு திட்டம் போடப்படுமா?

அதோடு 'டிரெஸ்டு சிக்கன்', 'ஃப்ரோசன் சிக்கன்' தயாரிப்பது பற்றியும் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கும் இந்தவகை சிக்கன்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

@ 863–865-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, கோழி ஒன்றரை வருடம்தான் முட்டையிடும். அதன் பிறகு அதை இறைச்சி வகைக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்கள். அந்த வகையிலே முட்டையிட்டு முடிந்த கோழிகளை பக்குவப்படுத்துகிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'டிரெஸ்டு சிக்கன்' என்று குறிப்பிடுகிறார்கள். டிரெஸ்டு சிக்கனை ப்ரோஸன் சிக்கனுக்கினுல்தான் வெளி மாவட்டங்களில் கொண்டு போய் விற்பனை செய்யும்போது கெட்டுப்போகாமல் இருக்கும். முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்கு உண்டான நடவடிக்கைகளையும் இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். 5,000 கோழிக் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக 20,000 குஞ்சுகளைப் பொரிக்க வைக்கும் திட்டம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கப்பலூரில் மட்டும் 5,000 கோழிக்குஞ்சுகள் பொரிப்பதை 20,000-மாக மாற்றுவதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பெருமளவில் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்தால்தான் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்ய முடியும்; தொழில் லாபகரமாக நடைபெறும். இப்போது பல இடங்களில் கோழிப்பண்ணைகள் ஆரம்பிக்கிறார்கள். அந்தப் பண்ணைகளுக்கு முட்டையிடுகின்ற பருவத்திலுள்ள கோழி ஒன்று 20 ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இப்போது கோழித் தீவனம் 1½ ரூபாய்க்கு மேல் விற்கிறது. அதன் காரணமாக பல விவசாயிகள் பண்ணைகளை மூடி விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் லாபம் இல்லை. ஆகவே, கோழியும் கோழித் தீவனமும் குறைந்த விலைக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெரிய உண்மையைச் சொன்னார்கள். கோழிப் பண்ணைகளுக்கு கோழித் தீவனத்தை குறைந்த விலைக்குக் கொடுத்தால் லாபம் கிடைக்கும் என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தற்போது கோழித் தீவனம் கிலோ 1½ ரூபாய்க்கு விற்கிறது என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். அது சில தனியார் கம்பெனிகளில் இருக்கலாம். அரசு 1.05 ரூபாய்க்கு நந்தனம் உற்பத்தி நிலையத்திலிருந்து கொடுக்கிறது. அது கூட அதிகம் என்று நான் சொல்லியிருக்கிறேன். விலையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

குறிப்பாக மக்காச்சோளத்திற்குப் பதிலாக இந்த குச்சிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்குகளை சேர்த்துக் கொடுத்தால் விலை குறைகிறது; அதனால் தீனியின் தரம் குறைவதில்லை. அந்த வகையிலே கோழித் தீவனத்தின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.